ஏகத்துவத்தின் உண்மை

ஏகத்துவம் (தவ்ஹீத்) என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை என்பது மட்டுமல்லாது அது அதற்கான தெளிவான ஆதாரமும்கூட. ஆகவே, ஒரு முஸ்லிம் இதனை சரியான முறையில் விளங்கிக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். தவ்ஹீத் என்பது ஒரு மனிதன் முழுவதுமாக தூய எண்ணத்துடன் அல்லாஹ்வுக்கு மட்டும் பணிந்து அவனுக்கு வழிபடவேண்டும் என்பதாகும். இறை வணக்கம் அல்லது இபாதத்து என்பது சிரம் தாழ்த்துதல் மற்றும் முழுவதுமாகவே தலை குனிந்து வணங்குவது என்பது பொருளாகும். இது மனப்பூர்வமாக அன்பு வெளிப்படுத்துவதாகும். இது வாய்மொழியாலும் ஒருவருடைய செயல்களாலும், வெளிப்படையாகவோ மனப்பூர்வமாகவோ நெருக்கத்தை அடைவதாகும். இதுவே அனைத்து படைப்பினங்களும் படைக்கப்படுவதற்கான முக்கிய காரணமும் நோக்கமுமாகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَمَا خَلَقْتُ ٱلْجِنَّ وَٱلْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴿٥٦﴾ (الذاريات:56)

பொருள்: நான் ஜின்களையும் மனிதர்களையும் எனக்கு அடிபணியவேண்டும் என்பதற்காவேயன்றி வேறு எதற்காகவும் படைக்கவில்லை (அத்ஜாரியாத்:56)

ஈமான் கொண்ட ஒரு நம்பிக்கையாளர் இறைவணக்கம் என்பது அல்லாஹ் ஒருவன் என்று சாட்சி கூறுவது, தொழுகை. ஜ்ஸகாத், நோன்பு மற்றும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை, மாறாக, அது மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்கள் மற்றும் ஈடுபாடுகளையும் உள்ளடக்கியது என்பதை நன்கறிவார். இறைவணக்கம் மற்றும் இபாதத்திற்கான பல்வேறு வடிவங்களும் முறைகளும் உள்ளன. உதாரணமாக, ஒரு ஈமான்கொண்டவர் இறைஞ்சுகிறார், துஆ கேட்கிறார், ஆனால், அவர் அல்லாஹ்விடம் மட்டுமே இறைஞ்சுகிறார், ஏனெனில், துஆ கேட்பதும் இறைவணக்கமேயாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: **(الترمذي)** **اَلدُّعَاءُ هُوَ الْعِبَادَة** *பொருள்: துஆ கேட்பதும் இறைவனுக்கு அடிபணிந்து வணங்குவதேயாகும் (திர்மிதி).* இதன் காரணமாகவே, அவன் அல்லாஹ்வைத்தவிர யாரிடமும் இறைஞ்சுவதில்லை, துஆ கேட்பதில்லை. ஏனெனில், அவன் அல்லாஹ்வைத்தவிர யாரையுமே நன்மை தீமை செய்யும் ஆற்றல் படைத்தவனாகக் கருதுவதில்லை. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَلَا تَدْعُ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَنفَعُكَ وَلَا يَضُرُّكَ ۖ فَإِن فَعَلْتَ فَإِنَّكَ إِذًا مِّنَ ٱلظَّٰلِمِينَ ﴿١٠٦﴾ (يونس:106)

www.uzairfalahi.com

பொருள்: மேலும், அல்லாஹ்வை விட்டுவிட்டு உமக்குப் பலனளிக்கவும் கேடு விளைவிக்கவும் இயலாதவற்றிடம் நீர் பிரார்த்திக்காதீர், அவ்வாறு செய்வீராயின் நீர் அக்கிரமம் செய்பவர்களில் ஒருவராகிவிடுவீர் (யூனுஸ்: 106)

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: وَإِذَا سَأَلْتَ ، فَاسْأَلِ اللَّهَ பொருள்: *நீங்கள் எதையும் கேட்பதானால் அதனை அல்லாஹ்விடமே கேளுங்கள்.* ஒரு ஈமான் கொண்ட அடியான் அல்லாஹ்வைத்தவிர யாரிடமும் எதையும் கேட்டு அல்லாஹ்வுக்கு இணை வைப்பவனாக ஒருபோதும் ஆகமாட்டான். திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَلَا تَدْعُ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ فَتَكُونَ مِنَ ٱلْمُعَذَّبِينَ ﴿٢١٣﴾ **(الشعراء:213)**

பொருள்: ஆகவே, (நபியே) அல்லாஹ்வுடன் வேறு எந்தக் கடவுளையும் அழைக்காதீர்கள், அவ்வாறாயின் தண்டனை பெறுவோரில் நீரும் ஒருவராகிவிடுவீர் (அஷ்ஷுஅரா:213)

ஒரு முஃமின் அல்லாஹ்வைத்தவிர யாரையும் எதையும் செய்யும் ஆற்றலுடையவனாகக் கருதுவதுமில்லை, அவனுடன் யாரையும் இணையாக்குவதுமில்லை. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

أَمِ ٱتَّخَذُوا۟ مِن دُونِهِۦٓ أَوْلِيَآءَ ۖ فَٱللَّهُ هُوَ ٱلْوَلِىُّ وَهُوَ يُحْىِ ٱلْمَوْتَىٰ وَهُوَ عَلَىٰ كُلِّ شَىْءٍ قَدِيرٌ ﴿٩﴾ **(الشورى:9)**

பொருள்: என்ன, இவர்கள் அவனை விடுத்து பிறரைத் தம் பாதுகாவலர்களாக எடுத்துக்கொள்ளும் அளவிற்கு அறிவீனர்களாய் இருக்கின்றார்களே. அல்லாஹ்வே பாதுகாவலனாவான், அவனே இறந்தவர்களை உயிர்ப்பிக்கின்றான். மேலும், அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் கொண்டவன் ஆவான். (அஷ்ஷூரா:9)

ஒரு முஃமினான விசுவாசியின் கடமை யாதெனில் அவன் எப்போதுமே இணைவைப்பதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும், எவ்வகையிலும் அதனைத் தவிர்க்கவேண்டும். இது எதுவரை அவன் இணைவைப்பு, இணைவைப்பின் விதங்கள், அதன் வடிவங்கள் மற்றும் அதன்பால் கொண்டுசெல்லும் அனைத்து வழிகள் ஆகியவற்றைப்பற்றி நன்கு அறிந்திருக்கவில்லையோ அதுவரை இயலாது. இவ்வகையில், தாங்கூத் எனும் தீய வழியினை நிராகரிப்பது ஒரு ஏகத்துவத்தில் நம்பிக்கை கொண்டவனுக்கு மிகவும் முக்கியமானது. திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

www.uzairfalahi.com

فَمَن يَكْفُرْ بِالطَّاغُوتِ وَيُؤْمِن بِاللَّهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقَىٰ لَا انفِصَامَ لَهَا ۗ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ

﴿٢٥٦﴾ **(البقرة:256)**

பொருள்: இனி எவர் தாங்கூத்தை நிராகரித்து அல்லாஹ்வின்மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் திட்டமாக மிகப்பலமான பிடிமானத்தைப் பற்றிக்கொண்டவராவார், அது என்றுமே அறுந்துவிடாது, அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனும் நன்கறிவோனுமாய் இருக்கின்றான் (அல் பஃகரஹ்:256)

அல்லாஹ்வைத்தவிர, எதற்கு அடிபணிந்து வழிபட்டு வணங்கினாலும் அது தாங்கூத் எனப்படும். அனைத்து நபிமார்களும் தங்களுடைய வம்சத்தினர்களை இந்தத் தாங்கூத் எனும் தீய சக்திகளுக்குக் கீழ்ப்படிந்து வழிபடுவதைத் தடுத்து அவற்றைத்தவிர்த்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளார்கள். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ ۖ ﴿٣٦﴾ **(النحل:36)**

பொருள்: நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம், அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள், தாங்கூத் எனும் தீய சக்திகளுக்குக் அடிபணிவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று எச்சரித்தோம் (அந் நஹ்ல்:36)

தாங்கூத் என்பது துங்ய்யான் என்ற சொல்லிலிருந்து வந்தது, அதன் பொருள் வரம்புமீறுவது என்பதாகும். தாங்கூத் என்பவன் வரம்பு மீறுபவனாவான், அதாவது அல்லாஹ்வுக்கு மாறுசெய்து கேடு விளைவிப்பவன். ஒரு முஃமினானவன் தன்னுடைய உறவை அல்லாஹ்வின் புறத்திலிருந்து நீக்கி தாங்கூத்தான, அல்லாஹ்வுக்கு மாற்றமான ஒருவனுடன் எவ்வாறு இணைத்துக்கொள்ளமுடியும்? ஏனெனில்,அவற்றை விட்டுவிலகி இருப்பதாக வாக்களிப்பது விசுவாசத்தின் அடிப்படையான அம்சமாகும். ஹஜ்ரத் இப்ராஹீம் க்ஹலீலுல்லாஹ்(அ) அவர்கள் இதன் காரணமாகவே அவருடைய சமூகத்தார் வழிபட்டுவந்த விக்கிரகங்களை ஏற்க மறுப்பதாகவும் அவற்றின் எதிரி எனவும் பகிரங்கமாகப் பிரகடனம் செய்தார்கள். இதனைப் பற்றி திருக்ஃகுர்ஆன் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றது:

وَإِذْ قَالَ إِبْرَاهِيمُ لِأَبِيهِ وَقَوْمِهِ إِنَّنِي بَرَاءٌ مِّمَّا تَعْبُدُونَ ﴿٢٦﴾ **(الزخرف:26)**

பொருள்: இப்ராஹீம் தன்னுடைய தந்தையிடமும் தம்முடைய சமூகத்தாரிடமும் கூறியதை நினைவுகூறுங்கள், நீங்கள் எவற்றை வணங்குகிறீர்

www.uzairfalahi.com

களோ அவற்றுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை (அஸ்ஸுக்ஹ்ருஃப்:26)

அல்லாஹ்வுடைய கட்டளைகளை நிலைநாட்டுவதும் அவனுடைய ஏகத்துவத்தின் இணைபிரியா அம்சமாகும். ஒரு முஃஸ்லிமிடத்தில் எதனை அல்லாஹ் ஆகுமானதாக (ஹலாலானதாக) ஆக்கி இருக்கிறானோ அதுவே ஹலாலாகக் கருதப்படும், அவன் எதனை ஹராமாகத் தடுத்துள்ளானோ அது தடுக்கப்பட்டதாகவே இருக்கும். இதில் எவ்விதக் குறைபாடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ اللَّهَ حَدَّ حُدُودًا فَلَا تَعْتَدُوهَا وَفَرَضَ لَكُمْ فَرَائِضَ فَلَا تُضَيِّعُوهَا وَحَرَّمَ أَشْيَاءَ فَلَا تَنْتَهِكُوهَا وَتَرَكَ

أَشْيَاءَ مِنْ غَيْرِ نِسْيَانٍ مِنْ رَبِّكُمْ وَلَكِنْ رَحْمَةٌ مِنْهُ لَكُمْ فَاقْبَلُوهَا وَلَا تَبْحَثُوا فِيهَا (الحاكم)

பொருள்: அல்லாஹ் தஆலா வரம்புகளை நிர்ணயித்துள்ளான் அவற்றைக் கடக்காதீர்கள், அவன் சில கட்டாயக் கடமைகளையும் வகுத்துள்ளான், அவற்றை வீணாக்கிவிடாதீர்கள், சில பொருட்களை ஹராமாக்கியுள்ளான், அதற்கு அருகிலும் செல்லாதீர்கள் மற்றும் சில விஷயங்களை விட்டும் வைத்துள்ளான், அவை உண்மையில் அவனுடைய கருணையின் காரணமானவை, ஆகவே, அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள், அவற்றை ஆழ்ந்தறிய முற்படாதீர்கள். (அல்ஹாகிம்) ஒரு ஈமான் கொண்டவருடைய அணுகுமுறை எதுவாக இருக்கும் என்றால் அவன் அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளைப் பேணிப் பாதுகாப்புடன் இருப்பான், கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முழு ஆயத்தத்துடன் தயாராக இருப்பான் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதில் அல்லாஹ்வின் சந்தோஷம் மற்றும் திருப்பொருத்தமே அவனுடைய குறிக்கோளாக இருக்கும், இதனைத்தவிர வேறு எதற்காகவும் அவன் இதனைச் செய்வதில்லை.

www.uzairfalahi.com

அல்லாஹ்வின்மீது முழுவதுமாகவே சார்ந்திருப்பதும் தவ்ஹீதின் ஒரு முக்கிய அம்சமாகும், சொல்லப்போனால் தவ்ஹீத் முழுமையடைவதே தவக்குல் எனும் அல்லாஹ்வின்மீதே சார்ந்திருப்பதினால்தான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَعَلَى ٱللَّهِ فَتَوَكَّلُوٓاْ إِن كُنتُم مُّؤۡمِنِينَ ﴿٢٣﴾ **(المائدة:23)**

பொருள்: நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின் அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருங்கள் (அல் மாயிதா:23)

மற்றொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَتَوَكَّلۡ عَلَى ٱللَّهِۚ وَكَفَىٰ بِٱللَّهِ وَكِيلٗا ﴿٣﴾ **(الأحزاب:3)**

பொருள்: அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருப்பீராக, பொறுப் பேற்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன் (அல் அஹ்ஜ்ஸாப்:3)

ஆகவேதான் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَوْ أَنَّكُمْ كُنْتُمْ تَوَكَّلُونَ عَلَى اللهِ حَقَّ تَوَكُّلِهِ لَرُزِقْتُمْ كَمَا يُرْزَقُ الطَّيْرُ تَغْدُو خِمَاصًا وَتَرُوحُ بِطَانًا

பொருள்: நீங்கள் அல்லாஹ்வின்மீது எவ்வாறு சார்ந்திருக்கவேண்டுமோ அவ்வாறு இருப்பீர்களேயானால், அவன் உங்களுக்கு எவ்வகையில் அவன் பறவைகளுக்கு உணவளிக்கிறானோ அவ்வாறே உங்கள் தேவை களையும் பூர்த்தி செய்வான், அவை அதிகாலையில் பசியுன் புறப்பட்டுச் செல்கின்றன, மாலையிலோ அவை நிறைந்த வயிற்றுடன் திரும்பிவரு கின்றன (திர்மிதி, ஹாகிம். இப்னு மாஜா. அஹ்மத்)

அல்லாஹ்வை அஞ்சுவதும் ஏகத்துவத்தின் முக்கிய அம்சமாகும், ஒரு முஸ் லிம் அல்லாஹ்வைத்தவிர யாருக்கும் அஞ்சுவதில்லை. அவனுக்கு அல் லாஹ்வைத்தவிர யாராலும் நன்மையோ அல்லது தீமையோ உண்டாக்க முடியாது என்ற உறுதியான நம்பிக்கை உண்டு. எந்த ஒரு நன்மையோ தீமையோ அல்லாஹ்வின் நாட்டத்தினால் மட்டுமே ஏற்படும். இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

وَاعْلَمْ أَنَّ الأُمَّةَ لَوْ اجْتَمَعَتْ عَلَى أَنْ يَنْفَعُوكَ بِشَيْءٍ لَمْ يَنْفَعُوكَ إِلاَّ بِشَيْءٍ قَدْ كَتَبَهُ اللَّهُ لَكَ، وَلَوْ
اجْتَمَعُوا عَلَى أَنْ يَضُرُّوكَ بِشَيْءٍ لَمْ يَضُرُّوكَ إِلاَّ بِشَيْءٍ قَدْ كَتَبَهُ اللَّهُ عَلَيْكَ

பொருள்: அறிந்துகொள்ளுங்கள், மனிதர்கள் அனைவருமே ஒன்றுசேர்ந்து உங்களுக்கு நன்மை செய்ய விரும்பினாலும் அல்லாஹ் உங்களுக்காக விதித் துள்ளதைத்தவிர எவ்வகையிலும் நன்மை செய்ய முடியாது, மற்றும் மனிதர் கள் அனைவருமே ஒன்றுசேர்ந்து உங்களுக்குத் தீங்கு விளைவிக்கவேண்டும் என்று நினைத்தாலும் அல்லாஹ்வின் நாட்டமில்லாது அவர்கள் அதனைச் செய்துவிடமுடியாது (திர்மிதி). அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

إِنَّمَا ذَٰلِكُمُ ٱلشَّيْطَٰنُ يُخَوِّفُ أَوْلِيَآءَهُۥ فَلَا تَخَافُوهُمْ وَخَافُونِ إِن كُنتُم مُّؤْمِنِينَ ﴿١٧٥﴾ **(آل عمران:175)**

பொருள்: தன் நண்பர்களைக்கொண்டு உங்களை அச்சுறுத்திக்கொண்டிருந்த ஷைத்தானே அவ்வாறு கூறியவன் என்பது இப்போது உங்களுக்குப் புரிந் துவிட்டது. ஏனவே, நீங்கள் உண்மையிலேயே இறைநம்பிக்கையுடைய வர்களாக இருப்பின் இனி அம்மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள், எனக்கே அஞ்சுங்கள் (ஆலு இம்ரான்:175)

www.uzairfalahi.com

ஒரு முஃமினான அடியான் அல்லாஹ்விடமிருந்து மட்டுமே உதவி நாடுவான், மற்ற யாரிடமிருந்தும் ஒருபோதுமில்லை. அவன் ஒவ்வொரு ரகஅத்திலும் சூரா ஃபாதிஹா ஓதுகிறான், அதில் கூறப்பட்டுள்ளது:

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝ (الفاتحة: 5)

பொருள்: *உனக்கே நாங்கள் அடிபணிகிறோம், மேலும், உன்னிடமே நாங்கள் உதவியும் கேட்கிறோம் (அல் ஃபாதிஹா:5).* இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) அவர்களுக்கு அறிவுரை கூறும் வகையில் கூறுகிறார்கள்: وَإِذَا اسْتَعَنْتَ فَاسْتَعِنْ بِاللهِ *நீங்கள் எப்போது உதவி நாடினாலும் அல்லாஹ்விடமே உதவி நாடுங்கள்.* (திர்மிதி)

அல்லாஹ்வை தியானிப்பதும் நினைவு கூர்வதும் ஏகத்துவத்தின் பகுதியாகும், ஆகவேதான், ஒரு முஃமின் அல்லாஹ்வை தியானித்துக்கொண்டிருக்கின்றான், எப்போதும் அவனை மறந்துவிடுவதில்லை. அல்லாஹ் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான், ஒருநாள் அவனிடம் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் கேள்வி கணக்கு கேட்பான் என்பதை அவன் நன்கறிவான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ ۚ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ ۝ (الحديد: 4)

பொருள்: *நீங்கள் எங்கிருப்பினும் அவன் உங்களுடன் இருக்கின்றான், மேலும், நீங்கள் செய்யும் செயல்களையெல்லாம் அவன் பார்த்துக்கொண்டிருக்கின்றான் (அல் ஹதீத்:4)*

www.uzairfalahi.com

ஒரு முஸ்லிம் எப்போதும் அல்லாஹ்வை நினைத்துக்கொண்டிருப்பான், அவன் இறைவணக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போதும்கூட அல்லாஹ் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்ற உணர்வினை அவன் பெறுகிறான். அவன் எந்நேரமும் அல்லாஹ்வின் நெருக்கம், அவனுடைய திருப்பொருத்தம் மற்றும் சந்தோஷமடைவதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பான். இவ்வகையில், அல்லாஹ்வின் நெருக்கத்தை அளிக்கக்கூடிய அந்த விஷயங்களையெல்லாம் சிந்தித்து வாய்ப்புக்களைத் தேடித்தேடி அவற்றை நிறைவேற்றுகிறான். அல்லாஹ்வின் கோபம் மற்றும் வெறுப்புக்கு ஆளாக்கக்கூடியவை என்ற சந்தேகம் ஏற்பட்டாலும், அத்தகைய சிந்தனைகள், நினைவுகள், வழிமுறைகள், பாதைகள் மற்றும் செயல்களையெல்லாம் விட்டு வெகுதூரமாகவே விலகியிருப்பான். இதுவே தவ்ஹீத் எனப்படுகின்றது, அதாவது அன்பின் உச்சக்கட்டம் மற்றும் நிறைவான வகையில் அடிபணிதல்.

* * *

www.uzairfalahi.com